# ‘பிரதமர் இண்டன்ஷிப்’ திட்டத்தின் சுணக்கத்திற்கு காரணம் என்ன?

## நாடாளுமன்றத்தில் கனிமொழி கருணாநிதி கேள்வி!

**புதுடெல்லி, ஆக. 20 -**

**பிரதமர் இன்டன்ஷிப் திட்டத்தின் சுணக்கத்துக்கு காரணம் என்ன? என கனிமொழி கருணாநிதி எம்.பி. மக்களவையில் கேள்வி எழுப்பினார்.**

**PM Internship எனப்படுகிற பிரதமர் இன்டன்ஷிப் திட்டம் செயல்படுத்தப்படும் முறை, அதில் நிலவும் தேக்கங்கள் குறித்து திமுக துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி மக்களவையில் கேள்விகளை எழுப்பினார்.**



*“PM Internship எனப்படுகிற பிரதமர் இன்டன்ஷிப் திட்டம் தொடங்கப் பட்டதிலிருந்து அத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற இளைஞர்களின் எண்ணிக்கை எத்தனை?*

*இத்திட்டத்தை செயல்படுத்துதலில் தனியார் நிறுவன ங்களுடன் போதுமான ஒருங்கிணைப்பு இல்லாததால், PM Internship இல் குறைந்த அளவிலான இளைஞர்களே பங்கேற்கிறார்கள் என்பதை ஒன்றிய அரசு அறிந்துள்ளதா?*

*அப்படியானால் இத்திட்டத்தின் செயல்திறனை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னென்ன?*

*இத்திட்டத்தின் கீழ் மிகக் குறைந்த ஆட்சேர்ப்புக்கான காரணங்களைக் கண்டறிய அரசாங்கம் ஏதேனும் மதிப்பாய்வு அல்லது மதிப்பீட்டை நடத்தியதா?*

*அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?*

*PM Internship திட்டத்தை மிகவும் பயனுள்ள வகையில் மறுசீரமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?”*

*ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்பி.எழுத்துபூர்வமாக கேட்டிருந்தார்.*

*இக்கேள்விகளுக்கு ஒன்றிய அரசின் கார்ப்பரேட் விவகாரத் துறை இணையமைச்சர் ஹர்ஷ் மல்கோத்ரா அளித்த பதிலில்,*

*“பிரதம மந்திரி இன்டன்ஷிப் திட்டம் (PMIS) 202425 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. ஐந்து ஆண்டுகளில் சிறந்த 500 நிறுவனங்களில் ஒரு கோடி இளைஞர்களுக்கு இன்டன்ஷிப் பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.*

*கார்ப்பரேட் விவகார அமைச்சகம் அக்டோபர் 3, 2024 அன்று இந்தத் திட்டத்தின் ஒரு முன்னோடித் திட்டத்தை ( பைலட் ப்ராஜக்ட்) தொடங்கியது.*

*இதன்படி ஒரு வருடத்தில் 1.25 லட்சம் இளைஞர்களுக்கு இன்டன்ஷிப் வாய்ப்புகளை வழங்குவதாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

*இந்த பைலட் திட்டத்தின் முதல் சுற்றில்,280 தனியார் நிறுவனங்கள் கூட்டு நிறுவனங்களாக இணைந்தன. இவை 1.27 லட்சத்திற்கும் மேற்பட்ட இன்டன்ஷிப் வாய்ப்புகளை முன் வைத்தன.*

*நாடு முழுவதிலிருந்தும் PMIS போர்ட்டலில் 1.81 லட்சம் வேட்பாளர்களிடமிருந்து 6.21 லட்சத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டன.*

*இவற்றில் 82,000 க்கும் மேற்பட்ட இன்டன்ஷிப் ஆஃபர்கள் வழங்கப்பட்ட நிலையில், 28,000 க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் ஏற்று இன்டன்ஷிப்பில் இணைய முன் வந்தனர்.*

*முதல் சுற்றில் 8700 க்கும் மேற்பட்ட விண்ணப்ப தாரர்களே இன்டன்ஷிப்பில் சேர்ந்தனர்.*

*பிஎம் இன்டன்ஷிப் இரண்டாவது சுற்று பைலட் திட்டம் 2025 ஜனவரி 9 ஆம் தேதி தொடங்கியது.*

*இந்த சுற்றில் 327 கூட்டு நிறுவனங்கள் நாடு முழுவதிலும் 735 மாவட்டங்களில் 1.18 லட்சத்துக்கும் மேற்பட்ட இன்டன்ஷிப் வாய்ப்புகளை அளித்துள்ளன. 2 லட்சத்து 14 ஆயிரம் விண்ணப்பதாரர்களிடம் இருந்து 4 லட்சத்து 55 ஆயிரம் விண்ணப்பங்கள் பெறப்பட்டன.*

*2025 ஆகஸ்டு 12 ஆம் தேதிய நிலவரப்படி இத்திட்டத்தின் கூட்டு நிறுவனங்கள் 82 ஆயிரம் இன்டன்ஷிப் பயிற்சிகளை அளிக்க முன் வந்தன. இவற்றில் 24 ஆயிரம் விண்ணப்பதாரர்கள் இன்டன்ஷிப்பில் இணைந்துள்ளனர்.*

*நிறுவனங்கள் பயிற்சிக்கான விருப்பங்களை வெளியிடுதல், அவற்றை பயிற்சியாளர்கள் ஏற்றுக் கொள்ளுதல், சேர்தல் செயல்முறை இப்போதும் நடந்து கொண்டிருக்கிறது.*

*PM Internship திட்டத்தை மேம்படுத்துவதற்கும் செயல்படுத்துவதற்கும் தொழில்துறை, மாநில அரசுகள், தொழில் சங்கங்கள், கல்வி நிறுவனங்கள் போன்ற பல்வேறு பங்குதாரர்களுடன் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் தொடர்பு கொண்டு, அவர்களை ஒருங்கிணைத்து பணிபுரிந்து வருகிறது.*

*இத்திட்டம் பற்றிய விவரங்கள் நாடு முழுவதும் உள்ள இளைஞர்களை சென்று சேரும் வகையில் தகவல் தொடர்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.*

*PMIS முன்னோடித் திட்டத்தின் முதன்மை நோக்கம் இளைஞர்களுக்கு வணிகம் உள்ளிட்ட நிறுவனங்களின் சூழலில் பயிற்சி மற்றும் அனுபவத்தை வழங்குவதன் மூலம் அவர்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதாகும்.*

*கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தால் இத்திட்டம் பற்றிய மதிப்பீடு ஆய்வு, கால் சென்டர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டது. விண்ணப்பதாரர்கள், தொழில் நிறுவனங்கள், தொழில் அமைப்புகள், மாநில அரசுகள் உள்ளிட்டவர்களிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.*

*இன்டன்ஷிப் அழைப்பை ஏற்காத விண்ணப்பதாரர்களிடம் அதற்கான காரணங்களும் இந்த மதிப்பீட்டாய்வில் கேட்கப்பட்டன.*

*அதில் கணிசமானோர் இன்டன்ஷிப் வழங்கப்படும் இடம், பயிற்சிக் காலம் ஆகியவை தங்களுக்கு வசதியாக இல்லாத காரணத்தாலும், உயர் கல்வியைத் தொடர வேண்டியிருப்பதால் பங்கேற்க இயலவில்லை என்றும் கூறியிருக்கிறார்கள்.*

*பிஎம் இன்டன்ஷிப் பைலட் திட்டம் என்பது முழு அளவிலான செயல்படுத்தலுக்கு முந்தைய நிலையாகும். திட்டத்தை செயல்படுத்தும் உத்திகள், செயல்படுத்துவதற்கான உள் கட்டமைப்புகள் பற்றிய சோதனையாக இது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*பைலட் திட்டத்தை செயல்படுத்தும் போது இதில் தொடர்புடைய அனைத்து தரப்பினரிடம் இருந்தும் பெறப்பட்டுள்ள கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் முடிவுகளை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றின் அடிப்படையில் பிஎம் இன்டன்ஷிப் திட்டத்தின் முழு அளவிலான செயல்பாடு அமையும்” என்று ஒன்றிய அமைச்சர் பதிலளித்துள்ளார்.*



விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன் அவர்களின் சிற்றன்னை செல்லம்மாள் அவர்களின் மறைவிற்கு விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் அவர்களது வீட்டிற்கு நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தார்.

### வார இறுதி நாட்களை ஒட்டி

# 1,040 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும்!

## போக்குவரத்துக் கழகம் தகவல்!

*சென்னை: ஆக. 20-*

*வார இறுதி நாட்களை ஒட்டி 1,040 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது. கிளாம்பாக்கத்தில் இருந்து ஆக.22ல் 340 பேருந்துகளும், 23ம் தேதி 350 பேருந்துகளும், கோயம்பேட்டில் இருந்து ஆக.22, 23ம் தேதிகளில் தலா 55 சிறப்புப் பேருந்துகளும், மாதவரத்தில் இருந்து ஆக.22, 23ம் தேதிகளில் தலா 20 சிறப்புப் பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன.*

*மேலும் வெளியான அறிக்கையில்; 22/08/2025 (வெள்ளிக்கிழமை) 23/08/2025 (சனிக்கிழமை) மற்றும் 24/08/2025 (ஞாயிறுக் கிழமை) வார விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னையிலிருந்தும் இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம். மதுரை. திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு. திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 22/08/2025 (வெள்ளிக்கிழமை) அன்று 340 பேருந்துகளும், 23/08/2025 (சனிக்கிழமை) 350 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஒசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 22/08/2025 வெள்ளிக்கிழமை அன்று 55 பேருந்துகளும் 23/08/2025 சனிக்கிழமை அன்று 55 பேருந்துகளும் மேற்கூறிய இடங்களிலிருந்தும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது மற்றும் பெங்களூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 200 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாதாவரத்திலிருந்து 22/08/2025 அன்று 20 பேருந்துகளும் 23/08/2025 அன்று 20 பேருந்துகளும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது.*

*மேலும், ஞாயிறு அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்ப ட்டுள்ளது.*

*இந்நிலையில், இந்த வார இறுதியில் வெள்ளிக்கிழமை அன்று 6,233 பயணிகளும் சனிக்கிழமை 2,966 பயணிகளும் மற்றும் ஞாயிறு அன்று 5,510 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலை தூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு WWW.TNSTC.IN மற்றும் MOBILE APP மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

*இச்சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே. பயணிகள் மேற்கூறிய வசதியினை பயன்படுத்தி தங்களது பயணத்தினை மேற்கொள்ள இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.*

### மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம். எஸ். கணேஷ்குமார் தலைமையில்

# விருத்தாசலம் எம்.எஸ். (எ) எம்.செல்வராசு 28 ஆம் ஆண்டு நினைவஞ்சலி!

## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் சி.வி.கணேசன் பங்கேற்பு!

*கடலூர் , ஆக. 20 -*

*கடலூர் மாவட்டம் விருத்தாசலத்தின் “சீமான் வீட்டு செல்லப்பிள்ளை” என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் அன்புடன் அழைக்கப்பட்டவர் விருத்தாசலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் மாநில நிலவள வங்கி தலைவர், ஒருங்கிணைந்த தென்னாற்காடு முன்னாள் மாவட்டக் கழக செயலாளர், முன்னாள் கழக அமைப்பு செயலாளர் எம்.எஸ். (என்கின்ற) எம்.செல்வராஜ் அவர்களின் 28 வது நினைவு தினம் விருத்தாசலத்தில்18.08.2025 திங்கள் கிழமை அன்று அனுசரிக்கப்பட்டது.*

*அதனையொட்டி பாலக்கரையில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட அவரது திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு அரங்கத்திலிருந்து அவரது இல்லம் வரை கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார் தலைமையில் நடைபெற்ற நினைவஞ்சலி பேரணியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி. வெ.கணேசன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு அவரது இல்லத்திற்கு சென்று திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தினார்.*

*இந்நிகழ்வில் நகர செயலாளர் தண்டபாணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.டி. கலைச்செல்வன், ஒன்றிய செயலாளர்கள் தி . வேல்முருகன் , பாவாடை , கோவிந்தசாமி, கனக .கோவிந்தசாமி, கோட்டேரி. சுரேஷ், ஆசைத்தம்பி, விருத்தாசலம் நகர மன்ற தலைவர் டாக்டர் சங்கவி முருகதாஸ், மங்கலம்பேட்டை பேரூர் செயலாளர் பாத்திரக்கடை செல்வம், பேரூராட்சி தலைவர் சம்சாத் பாரி இப்ராஹிம், மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் எஸ்.ராமு, பொதுக்குழு உறுப்பினர்கள் அரங்க. பாலகிருஷ்ணன், குரு சரஸ்வதி,ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும்*

*நகர கழக துணை செயலாளர்கள் நம்பிராஜன், சுந்தரமூர்த்தி, மாவட்ட பிரதிநிதி ஆட்டோ பாண்டியன்,*

*நகர,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் பொன்.கணேஷ், பட்டி. வசந்தகுமார், நடராஜன், வெங்கடேசன், அருண் பிரபாகர், தனசேகர், அப்துல் அஜித், ஒன்றிய துணை செயலாளர்கள் பூலாம்பாடி டி. அண்ணாதுரை நாரையூர் என். குண சேகரன், கருவேப்பிலங்குறிச்சி முத்து மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள்*

*அறிவுடை நம்பி, இளங்கோவன், சுரேஷ், அறிவழகன், முகமது பாசில், முத்து, விருத்தாசலம் நகர மன்ற உறுப்பினர்கள் அன்பழகன், தளபதி, அறிவழகி முருகன், முத்துக்குமரன், வசந்தி புருஷோத்தமன், தீபா மாரிமுத்து, ராசாத்தி சரவணன், மாவட்ட மாணவர் அணி சதீஷ், செல்வமணி நகர மாணவரணி கிருஷ்ணா, மார்டின், நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் குமார், நிஷாந்த், அஜய், பாலு, இளையராஜா, குரு, மற்றும் மாவட்ட, நகர , ஒன்றிய, பேரூர் கழக செயலாளர் மற்றும் நிர்வாகிகள் சார்பு அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கிளை கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.*



விருத்தாசலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், கழக முன்னாள் அமைப்புச் செயலாளர் எம். எஸ். (என்ற) எம். செல்வராஜ் அவர்களின் நினைவு நாள் முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ் குமார் தலைமையில் மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் சி.வி. கணேசன் மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் விருத்தாசலம் நகர செயலாளர் க.தண்டபாணி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.டி கலைச்செல்வன் ஒன்றிய செயலாளர்கள் தி.வேல்முருகன் கனக. கோவிந்தசாமி, பாவாடை கோவிந்தசாமி, நகர மன்ற தலைவர் டாக்டர் சங்கவி முருகதாஸ், கோட்டேரி பழனிசுரேஷ், மங்கலம்பேட்டை செல்வம் எஸ்.ராமு, அரங்க பாலகிருஷ்ணன், குரு சரஸ்வதி, நம்பிராஜன் உள்ளிட்ட மாவட்டக் கழக, ஒன்றிய கழக, நகர கழக நிர்வாகிகள் மற்றும் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### உள்நாட்டு கால்நடை இனங்களின் மேம்பாட்டில்

# ராஷ்ட்ரிய கோகுல் மிஷனின் முக்கிய நோக்கம் என்ன?

## மக்களவையில் – தே.மலையரசன் கேள்வி!

*புதுடெல்லி, ஆக. 20 - மக்களவையில் கள்ளக்குறிச்சி தே.மலையரசன் எழுப்பி கேள்விகள் வருமாறு:-*

*ராஷ்ட்ரிய கோகுல் மிஷனின் (RGM) நோக்கங்கள் மற்றும் முக்கிய கூறுகள் மற்றும் உள்நாட்டு கால்நடை இனங்களின் மேம்பாட்டில் RGM இன் நோக்கம் என்ன?*

*தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் மாநில வாரியாக நிறுவப்பட்ட மொத்த கோகுல் கிராம்கள் மற்றும் காளை தாய் பண்ணைகளின் எண்ணிக்கை ?*

*பழங்குடி கால்நடை இனங்களின் உற்பத்தித்திறன் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் இந்த மிஷனின் தாக்கம் என்ன?*

*இந்த மிஷனின் கீழ் விவசாயிகள் மற்றும் பால் கூட்டுறவுகளுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்படும் நிதி உதவி மற்றும் தொழில்நுட்ப ஆதரவு என்ன?*



*உள்நாட்டு இன கால்நடைகளை பாதுகாப்பை மேலும் ஆதரிக்க எதிர்கால ஆண்டுகளில் ராஷ்ட்ரிய கோகுல் மிஷனை விரிவுபடுத்தவோ அல்லது மாற்றியமைக்கவோ ஒன்றிய அரசு ஏதேனும் திட்டங்களைக் கொண்டிருக்கிறதா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?*

*உள்நாட்டு மாடு இனங்களைப் பாதுகாப்பதில் முன்னேற்றம், உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் கோகுல் கிராம்களை நிறுவுதல் உள்ளிட்ட RGM செயல்படுத்தலின் நிலை என்ன?*

*அதிக மகசூல் தரும் உணவு வகைகள் மற்றும் சிலேஜ் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் உட்பட கால்நடைகளுக்கு உணவு கிடைக்கும் தன்மை மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்த ஒன்றிய அரசால் மேற்கொள்ளப்பட்ட உத்திகள்?*

*இவ்வாறு கள்ளக்குறிச்சி தே.மலையரசன் கேள்வி எழுப்பினார்.*

### ரஷிய சரக்கு ரயில் மீது உக்ரைன் தாக்குதல்!

கீவ்., ஆக.20–

எரிபொருள் ஏற்றிச் சென்ற ரஷியாவுக்குச் சொந்தமான ரயில் மீது உக்ரைன் இன்று (ஆக. 19) தாக்குதல் நடத்தியுள்ளது. எரிபொருள் ஏற்றிச் சென்ற ரஷியாவுக்குச் சொந்தமான சரக்கு ரயில் மீது உக்ரைன் இன்று (ஆக. 19) தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் ரயில் கவிழ்ந்து தீப்பிடித்து எரிந்ததால், எரிபொருள் வீணாகியதாகவும், தண்டவாளங்கள் சேதமடைந்துள்ள தாகவும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உக்ரைன் ரஷியா இடையிலான போரை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியில் அமெரிக்க அதிபர் டிரம்ப் தீவிரம் காட்டி வருகிறார். இதன் ஒரு பகுதியாக கடந்த சில நாள்களுக்கு முன்பு ரஷிய அதிபர் விளாதீமிர் புதினை சந்தித்துப் பேசினார்.

தொடர்ச்சியாக ஐரோப்பிய தலைவர்களுடன் உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கியையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

உலக நாடுகளிடையே சமீபகாலமாக நடைபெற்று வரும் போரை முடிவுக்கு கொண்டுவந்ததை ப்போன்று, ரஷியா உக்ரைன் இடையி லான போரையும் முடிவுக்கு கொண்டு வருவேன் என அமெரிக்க அதிபர் டிரம்ப் சமீபத்தில் அறிவித்திருந்தார்.

இதனிடையே, தெற்கு உக்ரைனில் உள்ள ஜபோரோஜியா மாகாணத்திற்குட்பட்ட பகுதியில் எரிபொருள் ஏற்றிச்சென்ற ரஷியாவுக்குச் சொந்தமான சரக்கு ரயில் மீது உக்ரைன் இன்று தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதலில் ரயில் கவிழ்ந்து தீப்பிடித்து எரிந்தது. இதில், தண்டவாளங்கள் முற்றிலும் சேதமடைந்துள்ளதால், அந்த வழியாக ரஷியாவுக்கு ரயில் போக்குவரத்து முற்றிலும் நிறுத்தப்படும் என உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள் கூட்டம்

### தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு

தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் கூட்டம் 24.8.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11.00 மணி அளவில், கிருஷ்ணகிரி, "தேவராஜ் மகாலில்" எனது தலைமையில்;

கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா, எம்.பி., சிறப்புரையாற்றிட;

வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், எஸ்.மோகன் வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் மாலைராஜா, வி.ஜெயன், கோவை நா. முருகவேல், பி.டி. பாண்டிச்செல்வம், எஸ்.முத்துச்செல்வி, என். தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர் வர்த்தகர் அணித் துணைச் செயலாளர்கள் ஐ. கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ். அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், சிவகாசி த. வனராஜ், வி.பி. மணி, இ.ராமர், க. தனசெல்வம், பெ. சுந்தரவரதன், வே. பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ.சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கே.வி.எஸ்.சீனிவாசன், கிருஷ்ணகிரி பி.டி.அன்பரசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட மற்றும் மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தலைவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்** : ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் வர்த்தகர் அணி பட்டியல் பெறுதல் மற்றும் கழக அணி வளர்ச்சி குறித்து.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை 18.
*நாள் : 13.08.2025.*

**காசி முத்துமாணிக்கம்,**
செயலாளர்
*தி.மு.க. வர்த்தகர் அணி*